<u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>

<u>அ.வ எண்: 53/ 2018 குருசாமி (வாசா1) தேதி:24.09.2024</u>

<u>வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

புளியங்குளம் கிராமம் அருள்மிகு ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீநிவாச பெருமாள் கோவில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் கோவில் என்றால் சரியல்ல. அந்த கோவில் நிர்வாகத்தை 2017 ம் வருடமே இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டது என்றால் சரியல்ல. நான் அந்த கோவிலில் அக்தார் ஆவேன். நான் அந்த கோவிலில் பூஜை செய்து வழிபாடு செய்து வருவதை 5,6,7 பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த இடைஞ்சல் பிரச்சனை சம்பந்தமாக நான் அடிக்கடி அந்த கோவிலை பூட்டி சென்றுவிடுவேன் என்றால் சரியல்ல. அந்த கோவிலுக்கு ஆட்கள் வருவது கிடையாது. எங்கள் இருதரப்பினருக்கும் அடிக்கடி பிரச்சனை ஏற்படுவதால் நான் மேற்படி கோவிலை பூட்டி சென்றுவிடுவேன் என்றாலும், அதனால் பொதுமக்கள் 3 ம் பிரதிவாதிக்கு புகார் மனு அனுப்பியுள்ளனர் என்றாலும், அந்த புகாரின் பெயரில் விசாரணை செய்து இந்து சமய அறநிலையத்துறை மேற்படி கோவில் நிர்வாகத்தை தனது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டது என்றாலும், சரியல்ல. 23.06.2017 தேதியில் இந்து சமய அறநிலையத்துறை கோவில்பட்டி பிரிவில் உள்ள ஆய்வாளரை மேற்படி கோவிலுக்கு தர்காராக நியமனம் செய்து 3 ம் பிரதிவாதியால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து திருநெல்வேலியில் உள்ள இணை ஆணையளரிடம் நான் மேல்முறையீடு செய்தேன்.

அந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த தள்ளுபடி உத்தரவை எதிர்த்து நான் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் மனுதாக்கல் செய்து தடை உத்தரவு வாங்கியுள்ளேன். நான் சொல்வதுபோல் 2ம் பிரதிவாதியிடம் நான் தாக்கல்செய்துள்ள சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்படவில்லை என்றாலும், இன்றுவரை நிலுவையில்தான் இருந்து வருகிறது என்றாலும் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:** பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.